திரு. பி. ஜி. கருத்திருமன் : தடியடிப்பிரயோகம் அநாகரிக மான முறையில் செய்யப்பட்டதால், பல பேர்கள் காயம் அடைந் திருக்கிறார்கள். 500, 600 பேர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள், கை ஒடிந்தவர்கள் இருக்கிறார்கள், கால் ஒடிந்தவர்கள் இருக்கிறார்கள். அதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தடியடிப் பிரயோகம் என்ற வார்த்தைகள் தான் இதிலே இருக்கின்றன. அதைத் தொடர்ந்து எத்தனை பேர்கள் அடிபட்டார்கள், எப்படி தடியடிப் பிரயோகம் செய்தார்கள், அதன் விளைவு என்ன என்பதைப்பற்றி யெல்லாம் இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. தடியடிப்பிர யோகம் பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவருவது முறை யாகாது. அதுதான் விதிமுறை. அதுதான் இந்த மன்றத்தில் வழி வழியாக பின்பற்றப்பட்டு வந்திருக்கிற விதிமுறை. அதற்கு இந்த மன்றத்து உறுப்பினர்கள் பணிந்து, மன்றத்தின் பெருமை யைக் காக்க வேண்டும்.

திரு. கே. விநாயகம் : இந்த விஷயத்தில் அரசாங்கம் என்ன தான் சொல்ல இருக்கிறது.

What is the decision taken by this Government with regard to the holding of the judicial enquiry?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அனுமதி தந்த பிறகு தானே அரசாங்கத் தரப்பில் ஏதாவது சொல்லவேண்டு மென்றால் சொல்லவேண்டும் ? நான் தான் அனுமதி தரவில்லையே. வேண்டுமானால் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தால், முதல் அமைச்சர் அவர்கள் விளக்கமான அறிக்கை கொடுப்பார் கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்கள் ஏதா வது விளக்கம் தருவாரா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே சொன்னேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், முதல் அமைச்சர் அவர்கள் விரிவான அறிக்கை கொடுப்பார்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, without meaning any disrespect to the Chair, we will withdraw from the House.

(Then the hon. Members belonging to the Congress Party staged a walk-out).

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ii) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, இப்பேரவை யின் 6-வது விதிக்கிணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்

1968 ஆகஸ்ட் 16] [பேரவைத் துணைத் தலைவர்]

பேரவையின் நான்காம் கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களாக (பானெல் ஆஃப் சேர்மன்) நான் நியமிக்கிறேன் :

1. திரு. வி. எஸ். கோவிந்தராசன்.
2. திரு. பெ. மலைச்சாமி.
3. திரு. ந. தருமலிங்கம்.
4. திரு. எஸ். முருகையன்.
5. திரு. வை. சுவாமிநாதன்.
6. திரு. வி. கே. கோதண்டராமன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் இரண்டு ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருந்தேன் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களைப் பற்றிய முடிவை நான் நாளை தெரிவிக்கிறேன்.

6. 1968-69-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விரிவான உரை [a] அச்சடிக்கப்பட்டு மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. முழு உரையையும் நான் படிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். அதிலே இருக்கிற ஒரு சில குறிப்புகளை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம், இந்த உரை முழுவதும் படிக்கப்பட்டதாகக் கொண்டு, அதன்மீது விவாதத்தைத் துவக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களை தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். இதிலே தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1967-68-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விளக்கப்பட்டு உள்ளது.

கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது சட்டமன்றத்தில் கூறப்பட்ட கருத்துக்களை யொட்டி மின்சார வாரியம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விவரத்து அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்னரே வழங்கப்பட்டுள்ளது. அதையொட்டி சில பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அப்படி எடுக்கப் பட்ட முடிவுகளில் ஒரு முக்கியமான முடிவு, இந்த மாநிலத்திலுள் பற்றுக்குறையை நீக்குவதற்காக மைசூர் மாநிலத்திலிருந்து நாம் ஏற்கனவே மின்சாரம் பெற்றுவந்தோம். ஏற்கனவே யூனிட் ஒன்றுக்கு 9 காசு என்ற அளவில் மின்சாரம் பெற்றுவந்தோம். அதற்குப் பிறகு இந்த ஆண்டு செய்துகொண்ட

---

[a] 100–118-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.